மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எங்கெங்கே தடை இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது.

சுவேதா நதியின் குறுக்கே பாலங்கள்

*690 வினா.—திரு. மூ. மாரிமுத்து: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், கவர்பனை, வத்துவாடி, 74 கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களில் சுவேதா நதியின் குறுக்கே பாலங்கள் கட்டும் செயற் குறிப்புகள் அரசு பரிசீலனையிலுள்ளனவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

உப்பாற்றின் குறுக்கே பாலம்

*691 வினா.—திரு. நா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம், நவநாரி கிராமத்தில் உப்பாற்றின் மேல் ஒரு மேம்பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர் குறிப்பிடுகிறதான பால வேலையை இதர சாலைகள் என்ற திட்டத்தின்கீழ் எடுத்துச் செயல்படுத்த ஒரு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருந்தது. ஆனால், இத்திட்டத்தின்கீழ் தற்போது போதிய நிதி வசதி புதிய வேலைகளை எடுத்துச் செய்ய ஒதுக்கப்படவில்லை என்ற காரணத்தால் அப்பால வேலை மேற்கூறிய திட்டத்தின் கீழ் கணிசமான நிதிவசதி ஒதுக்கப்படும் வருமான காலம் வரும் வரை பொறுத்திருக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. அ. ஆறுமுகம்: தற்சமயம் அந்தப் பாலம் கட்டும் திட்டம் எடுக்கப்படாவிட்டாலும் எப்பொழுது அது எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பணம் அதிகமாக இதற்கு ஒதுக்கீடு செய்யும்பொழுது அதற்கான வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

Kuil Thottam Slum Area

***692 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Labour be pleased to state the expenditure incurred by the Slum Clearance Board for rehabilitating the hut dwellers of Kuil Thottam Slum on Santhome High Road in the Foreshore area?**